## முதல்வர் மு.க.ஸ்டாலினின்

# ‘முதல்வர் படைப்பகம்’ திட்டம் மகத்தான வெற்றி!

## ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ ஆங்கில நாளேடு வெகுவாகப் பாராட்டு!

**சென்னை, மே 28–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூரில் புதிய திட்டமாகத் தொடங்கிய ‘முதல்வர் படைப்பகம்’ திட்டத்திற்கு அமோக வரவேற்பும் மகத்தான வெற்றியும் கிடைத்துள்ளது என்று “இந்துஸ் தான் டைம்ஸ்” ஆங்கிலப் பத்திரிகை பாராட்டு தெரிவித்துள்ளது.**




Hindustan Times

CHENNAI | PROFESSIONALS PREFER CO-WORKING SPACE TO OFFICE COMMUTE

State-run co-working spaces a hit as bookings extend till June-end

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை கொளத்தூர் தொகுதியில் புதிய திட்டமாக ‘**முதல்வர் படைப்பகம்**’ என்னும் திட்டத்தை 4.11.2024 அன்று தொடங்கிவைத்தார்கள். இத்திட்டம் **பகிர்ந்த பணியிடம்** என அப்போது அறிவிக்கப்பட்டது. அது தான் கூட்டுப் பணி இடம் என்று இங்கே குறிப்பிடப்படுகிறது.

அதாவது, அமைதியாக ஒருவர் வீட்டில் வசதிகள் இல்லாததால் தனியாகவோ அல்லது தன்னுடைய குழுவினருடனோ அமர்ந்து, குறித்த நேரத்திற்குள் தம்முடைய வேலையைச் செய்து முடித்துக் கொள்ள வேண்டும் என்று கருதினால், அதற்குத் தேவையான இட வசதி, இருக்கைகள், மேசை வசதி, மின் இணைப்பு வசதி, இணைய வசதி, குளிர்சாதன வசதி (AirConditioner), முதலிய அனைத்து வசதிகளுடனும் மிகமிகக் குறைந்த கட்டணத்தில் தனது மடிக் கணினியைப் பயன்படுத்தி கருதிய வேலையைச் செய்து முடித்துக் கொள்வதற்குப் பயன்படும் இடம் இந்த முதல்வர் படைப்பகம்.

இந்தத் திட்டம் முதலமைச்சர் அவர்களின் மற்ற திட்டங்களைப் போலவே படித்த இளைஞர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அது குறித்த வெற்றிச் செய்தியை “இந்துஸ்தான் டைம்ஸ்” ஆங்கில பத்திரிகை 26.5.2025 திங்கட்கிழமை அன்று செய்திக் கட்டுரையாக வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:

சென்னையில் உள்ள அரசு நடத்தும் கூட்டுப் பணி இடத்தில், 22 வயதான பட்டதாரி இளைஞர் ஒருவர் தொடங்கிய இரண்டு மாதமே ஆன சுற்றுலா நிறுவனம், டெக் மகிந்திராவில் ஆட்டோமேஷன் பிரிவின் 52 வயது முன்னாள் தலைவருடன் இடத்தை பகிர்ந்து கொள்கிறார். அவர் ஓய்வுக்குப் பிறகு ஐ.டி துறையில் தொழில்முனைவராக முயற்சி செய்து வருகிறார். அவருக்கு எதிரே, ஹைப்ரிட் காலத்தில் படுக்கையில் இருந்து வேலை செய்து வந்த Oracle நிறுவனத்தின் நிதி ஆய்வாளர் ஒருவர் இங்கு வந்த பின் (முதல்வர் படைப்பகம்) அதிக உற்பத்தித் திறனுடன் இருப்பதாக உணர்கிறார்.

இந்த இடம் மேசை வாடகைகள் சுலபமானதாக இருப்பதுடன், தனியார் கூட்டுப் பணி இடங்களுக்கு இணையான வசதிகள் மற்றும் அழகியலுடன் விஞ்சி நிற்கிறது .

இந்த முதல்வர் படைப்பகம் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மே 18 வரை ஆறு மாதங்களுக்கும் மேலாக அரசாங்கத்தின் முதல் கூட்டுப் பணி இடத்தைப் பயன்படுத்திய 32,000-க்கும் மேற்பட்ட நிபுணர்களில் இவர்களும் அடங்குவர். கூட்டுப் பணி இடங்களின் வளர்ந்து வரும் போக்கு, கோவிட்19க்குப் பிந்தைய அலுவலக இடங்களின் பரிணாமம் மற்றும் வீட்டில் இருந்து வேலை செய்வதில் சலிப்படைந்தவர்கள் மத்தியில், தனியார் பணி இடத்தை வாங்க முடியாத தொழில் முனைவோர்கள் மற்றும் இளைஞர்களுக்கு உதவ மாநில அரசு விரும்பியது.



எனவே, மேசை வாடகைகள் சுலபமானதாக இருப்பதுடன், தனியார் கூட்டுப் பணி இடங்களுக்கு இணையான வசதிகள் மற்றும் அழகியலுடன் கிடைக்கின்றன. 60 Mbps இணையம், ஏர் கண்டிஷனிங், மாநாட்டு அறைகள், வசதியான நாற்காலிகள், வீட்டுப் பராமரிப்பு, பாதுகாப்பு, சிற்றுண்டிச்சாலை ஆகியவை உள்ளன. 38 தனிப்பட்ட மேசைகள் மற்றும் மூன்று மாநாட்டு அறைகளுடன், முதல்வர் படைப்பகம் (முதல்வர் என்றால் முதலமைச்சர்; படைப்பகம் என்றால் ஒரு ஆக்கப்பூர்வமான இடம்) என்ற பெயரில் முன்னோடித் திட்டம், தொழில்கள் நிறைந்ததாகவும், ஸ்டார்ட்அப் அல்லது பெருநிறுவனங்களின் கலாச்சாரத்திற்கு, குறிப்பாக அறியப்படாத சென்னையின் வடக்குப் பகுதியில் 2011 இல் உருவாக்கப்பட்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தொகுதியான கொளத்தூரில் தொடங்கப்பட்டது. இது கொளத்தூர் குடியிருப்பாளர்கள் மட்டுமலலாமல், 7 கி.மீ தொலைவில் உள்ள ஆடம்பரமான அண்ணா நகர் போன்ற பிற சுற்றுப்புறங்களில் இருந்து வரும் நிபுணர்களாலும் நிரம்பியுள்ளது. மலிவு விலையிலான கூட்டுப் பணிக்கான தேவை அதன் முழு ஆக்கிரமிப்பு மற்றும் ஜூன் இறுதி வரை செய்யப்பட்ட முன்பதிவுகள் மூலம் தெரிய வருகிறது.

“எனது குழுவின் நான்கு முதல் எட்டு உறுப்பினர்களுக்கான மேசை இடங்களை வாடகைக்கு எடுப்பதற்கும், எங்கள் வாடிக்கையாளர்களுடனான சந்திப்புகளுக்காக மாநாட்டு அறைகளை முன்பதிவு செய்வதற்கும் எனக்கு மாதத்திற்கு ரூ. 25,000 செலவாகிறது. நான் ஒரு தனியார் இடத்தை வாடகைக்கு எடுத்தால், ஒரு இருக்கைக்கு ஜி.எஸ்.டி.யுடன் ரூ.7000 செலவாகும். எனது இதர செலவுகள் லட்சக்கணக்கில் இருந்திருக்கும்” என்று 22 வயதான பட்டதாரி இளைஞர் ஏ.உதயபிரகாஷ் கூறுகிறார்.

இங்கே, அரசு அரை நாளுக்கு (6 மணி நேரம்) ரூ.50 மற்றும் ஒரு நாளுக்கு (12 மணி நேரம்) ரூ.100 வசூலிக்கிறது, அதே நேரத்தில் மாதந்திர கட்டணம் ரூ.2,500 ஆகும். ஒப்பிடுகையில், சென்னையில் உள்ள ஒரு தனியார் கூட்டுப் பணி இடத்தில் ஒரு நாள் அடிப்படை கட்டணம் ரூ.350 முதல் தொடங்குகிறது, மேலும் ஹாட் டெஸ்க்குகள் மாதத்திற்கு ரூ.5,000 முதல் ரூ.12,000 வரை இருக்கும்.



உதயபிரகாஷ் திங்களன்று தனது மூன்று குழு உறுப்பினர்களுடன் ஒரு மேசையில் இருந்தார். சென்னையில் உள்ள Crescent கல்லூரியில் மாணவராக இருந்தபோது குழு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்யத் தொடங்கினார், அது இப்போது மதுரை மாவட்டம் மற்றும் சென்னையின் வடபழனியில் கிளைகளுடன் கூடிய Cheroot Holidays என்ற ஒரு சிறிய நிறுவனமாக வளர்ந்துள்ளது, இது கல்வி நிறுவனங்களுக்கான உள்நாட்டுச் சுற்றுலாவைக் கையாள்கிறது. ஏப்ரலில், அவர் தனது வணிகத்தைச் சர்வதேச சுற்றுலாவுக்கும் விரிவுபடுத்தினார், எட்டு குழு உறுப்பினர்களை நியமித்தார், அவர்கள் கொளத்தூர் முதல்வர் படைப்பகத்தில் (கூட்டுப் பணி இடத்தில்) இருந்து வேலையைத் தொடங்கினர்.

மூன்று மாடி வெள்ளை கட்டடம், குறைந்த வருமானம் கொண்ட வீடுகள் மற்றும் இலவச பொதுக் கழிப்பறை சூழ்ந்த ஒரு குறுகிய தெருவில் அமைந்துள்ளது. இந்தக் கூட்டுப் பணி இடம் தரைத்தளத்திலும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான அதே வசதிகள் மற்றும் தளவாடங்களுடன் கூடிய ‘கற்றல் மையம்’ முதல் தளத்திலும் உள்ளது. இந்த தளத்தில் உள்ள புத்தகங்கள், பெரும்பாலும் போட்டித் தேர்வுகள் பற்றியவை, தமிழ்நாடு அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவை என்று அரசாங்கத்திற்காக இந்தத் திட்டத்தைக் கண்காணிக்கும் ஹெலன் அனிதா கூறினார்.

இங்கு வரும் பயனர்கள் தங்கள் காலணிகள் மற்றும் பைகளைக் கட்டடத்தில் உள்ள திறந்த லாக்கரில் விட்டுவிட்டு, தரைவிரிப்பு போடப்பட்ட கூட்டுப் பணி தளத்திற்குள் தங்கள் மடிக்கணினிகள் மற்றும் பிற சாதனங்களை மட்டுமே எடுத்துச் செல்கிறார்கள். வரவேற்பறையில், ஊழியர்கள் இந்தத் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி, சென்னை மாநகராட்சி இணையதளத்தில் ஒரு குறியீடு அல்லது மொபைல் எண்ணைப் பயன்படுத்தி நிபுணர்கள் செய்த ஆன்லைன் முன்பதிவைச் சரிபார்க்கிறார்கள். இங்கே சோபாக்கள், ஒரு சிறிய மரத்தாலான சதுரங்கப் பலகை, டிக்டாக்டோ மற்றும் மஞ்சள் நிற புத்தகம், ஜேசன் பாரனின் ‘தி விஷுவல் எம்.பி.ஏ’ மைய மேசையிலும், ஒரு செய்தித்தாள் தாங்கியும் உள்ளன.

இவ்வாறு அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.